பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 13 செவ்வாய்க்கிழமை (27.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 120

# பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு தமிழ்க் கட்சிகளும் ஆதரவு தரவேண்டும்

## விடுதலைப் புலிகளின் வான் தாக்குதலின் பின்னர் நடந்த கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு,மார்ச்27

**பயங்கரவாதத்திற்கு எதிராக அரசாங்கம் எடுத்துவரும் தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்கு, சகல அரசியல் கட்சிகளும், குறிப்பாக தமிழ்க் கட்சிகளும் ஆதரவு தரவேண்டும்.**

**குறுகிய அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு இது விடயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.**

**இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

விடுதலைப் புலிகள் நடத்திய வான் தாக்குதலைத் தொடர்ந்து ஜனாதிபதி கட்சித்தலைவர்களின் அவசர கூட்டம் ஒன்றை நேற்று இரவு அலரி மாளிகையில் நடத்தினார்.

அங்கு வைத்தே அவர் மேற்படி வேண்டுகோளை - அழைப்பை - விடுத்தார்.

நேற்றுமாலை 6.30 மணியளவில் ஆரம்பமான கூட்டம் சுமார் நான்கு மணி நேரம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆளும் தரப்பில் உள்ள கட்சிகளின் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தவிர்ந்த ஏனையோர் கலந்து கொண்டனர்.

ஜே.வி.பியின் சார்பில் சோமவன்ஸ அமரசிங்க, விமல் வீரவன்ஸ ஆகியோரும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

''விடுதலைப் புலிகளுடனான பிணக்கை எவரும் இனப்பிரச்சினையாகச் சித்திரிக்கக்கூடாது. அது ஒரு பயங்கரவாதப் பிரச்சினை. புலிகளின் இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான, அரசின் தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்கு சகல அரசியல் கட்சிகளும் - குறிப்பாகத் தமிழ் கட்சிகளும் ஆதரவு வழங்கவேண்டும்'' என்று ஜனாதிபதி அங்கு பேசுகையில் தெரிவித்தார்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான பயணத்தை தவிர்க்கக் கோருகிறது ஆஸி.

இலங்கையில் தற்சமயம் நிலவிவரும் பதற்றமான சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இலங்கைக்கான பயணத்தை ஆஸ்திரேலியப்பிரஜைகள்தவிர்த்துக்கொள்ள வேண்டும்என்றுஅந்நாட்டின்வெளிவிவகாரத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளால் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தை இலக்குவைத்து மேற்கொண்ட விமானத் தாக்குதலை அடுத்தே இந்த எச்சரிக்கையை ஆஸ்திரேலியா விடுத்துள்ளது.

(03ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு ஆச்சரியம்!

கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் வான் தாக்குதல் நடத்தியிருக்கின்றமை குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆச்சரியம் வெளியிட்டிருக்கின்றனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பி.பி.ஸியிடம் கருத்துத் தெரிவித்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான தொர்பினுர் ஒமர்சன் இந்தத் தாக்குதல்கள் மேலும் மோதல்களுக்கு வழிவகுக்கக் கூடும் என்று கூறியுள்ளார். ''இவ்வகையான வான் தாக்குதலை நடத்திவிட்டு அந்த விமானங்கள் வட ..குதியிலுள்ள தமது நிலைகளுக்குப் பாதுகாப்பாகத் திரும்பியமை ஆச்சரியம் அளிக்கின்றது'' என்றும் அவர் சொன்னார்.

## பேச்சு மூலமான நிரந்தரத் தீர்வே தாக்குதல்களுக்கு முடிவு கட்டும்

### சம்பவத்தைக் கண்டித்து ஐ.தே.க. அறிக்கை

கொழும்பு, மார்ச் 27

கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தின் மீது மேற்கொள்ளப்பட்டது போன்ற தாக்குதல்களை நிறுத்துவதற்கும் இந்நாட்டு மக்களுக்கு நிம்மதியான வாழ்வை அளிப்பதற்கும் பேச்சு மூலமான தீர்வே சிறந்த வழியாகும் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி வெளியிட்டுள்ள தனது கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானங்களை எதிர்பார்த்து நிற்கும் பயணிகளுக்குத் தீங்கிழைக்கும் செய

(03ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளாங்குளம், புதுக்குடியிருப்பில் நேற்று கிபிர் விமானங்கள் தாக்குதல்

கிளிநொச்சி, மார்ச்27

மன்னார் - பூநகரி வீதியில் பூநகரியில் இருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வெள்ளாங்குளம் பகுதியில் நேற்று முற்பகலில் 'கிபிர்' விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின.

அந்தப்பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் இரு குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

அதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டுநாயக்க விமானத்தளத்தின்மீது விடுதலைப் புலிகள் திங்கள் அதிகாலை நடத்திய தாக்குதலின் பின்னர் விமானப் படையினரின் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் புதுக்குடியிருப்பிலும் 'கிபிர்' விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. இவற்றில் மக்கள் எவரும் பாதிக்கப்படவில்லை. ஆயினும் வீடுகள் பலவும் சேதமடைந்தன என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. (அ-1-4)

## சிங்களப் பயங்கரவாதிகளுக்கு தாக்குதலுடன் தொடர்பாம்

கொழும்பு, மார்ச்27

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் பின்னணி யில்சிங்களப்பயங்கரவாதிகளுக்கு தொடர்பு இருப்பதாக அமைச்சர் எச்.எம்.சந்திரசேன கூறினார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

விமானத்தளம் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணைகள் எல்லாக் கோணங்களிலும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சொன்னார். (அ-4)

## புலிகளின் வான் தாக்குதல்; இந்தியா ஆழ்ந்த கவலை

### அந்நாட்டு ஊடகங்களில் தகவல்கள்

கொழும்பு, மார்ச்27

விடுதலைப் புலிகளின் வான் புலிகள் நடத்திய தாக்குதலை இந்தியா ஆழ்ந்த கவலையோடு, உன்னிப்பாக நோக்குகின்றது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இந்தத் தாக்குதல் குறித்து இந்திய ஊடகங்கள் பல கோணங்களிலும் வெளியிட்டிருக்கும் தகவல்கள் வருமாறு:-

கடுமையான நெருக்கடிகள் மற்றும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் தமது வளைந்து கொடுக்காத உறுதியை இந்த வான் தாக்குதல் நடவடிக்கை மூலம் புலிகள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இது கிளர்ச்சி அமைப்புக்கு ஒரு பெரிய - இராட்சத - பாய்ச்சலாகும்.

வெளிச் சக்திகளின் ஆதரவின்றி கிளர்ச்சி அமைப்பு ஒன்று உலகில் முதற்தடவையாக வான் வழித் தாக்குதலை நடத்திக் காட்டியிருப்பது இப்போதுதான்.

புலிகளிடம் வான்படைப் பிரிவு இருப்பது பல ஆண்டுகளாகத் தெரிந்த விடயம். எனினும், நள்ளிரவு இருளில் சுமார் நானூறு கிலோமீற்றர் தூரம் வெற்றிகரமாகக் கடந்து குண்டுவீச்சுத் தாக்குதல் ஒன்றை அவர்கள் நடத்தியிருக்கின்றமை இந்திய அரச வர்க்கத்திடையே அபாயக் குரலை எழுப்பியிருக்கின்றது.

இந்திய நலனுடன் தொடர்புடைய விவகாரங்கள் மீதோ, தமிழர்கள் மீதோ புலிகள் எந்தத் தாக்குதலையும் நடத்தவில்லை என்பதையும் இந்திய அதிகாரிகள் விரைந்து தமது கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

**அபாய எச்சரிக்கை**

என்றாலும், இவ்விவகாரத்தில் கடந்த பல வருடங்களாக அடிபட்டுவந்த வதந்திகளைத் தாண்டி, வான் தாக்குதலை இப்போது புலிகள் நடத்திக் காட்டியிருக்கின்றமை அபாய எச்சரிக்கையை இந்தியாவுக்கு எழுப்பத் தவறவில்லை.

''இது மிக, மிக மோசமான நிலைமை'' - என்றார் பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய அதிகாரி ஒருவர்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## வான் புலிகளின் அச்சுறுத்தல் பற்றி ஆராய நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுக!

### கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மீதான தாக்குதலை அடுத்து ரணில் அவசர கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்தியிருக் கும் விமானத் தாக்குதலை அடுத்து நாட்டின் பாதுகாப்புக்கு வான்புலிகளால் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தை உடனே கூட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அவசர அழைப்பு விடுத்துள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு நேற்று அனுப்பிய அவசர கடிதம் ஒன்றிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

கட்டுநாயக்க விமானப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகளின் வான்படையினர் நடத்திய விமானத்தாக்குதல் நாட்டின் தேசியப் பாதுகாப்புக் கட்டமைப்பை அடியோடு கேள்விக்குள்ளாக்கி

(04ஆம் பக்கம் பார்க்க)

## கோழைத்தனமான தாக்குதல்; கண்டித்து அரசு அறிக்கை

கொழும்பு, மார்ச் 27

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட விமானத் தாக்குதலை 'கோழைத்தனமான தாக்குதல்' என்று தெரிவித்துக் கண்டித்திருக்கிறது அரசு.

இத்தாக்குதல் தொடர்பாக அரசின் கண்டனத்தைத் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் நேற்று வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கில் பெரும் தோல்விகளைச் சந்தித்துள்ள புலிகள், அந்தப் பின்னணியில் கட்டுநாயக்கா விமானப் படைமுகாம் மீது தாக்குதல் நடத்த மேற்கொண்ட கோழைத்தனமான தாக்குதலை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது.

தளத்தில் உள்ள யுத்த விமானங்களை அழிக்கும் தனது இலக்கில் அந்தத் தாக்குதல் தோல்வியில் முடிந்தாலும், அதில் விமானப் படையினர் மூவர் உயிரிழந்ததுடன் 17பேர் காயப் பாதிப்புக்கு

(04ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படையினரின் தீரச் செயலால் பாரிய அழிவுகள் தவிர்க்கப்பட்டன

### செய்தியாளர் மாநாட்டில் ஊடக அமைச்சர்

கொழும்பு, மார்ச்27

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதலில் மிக் -27 குண்டு வீச்சு விமானங்களைத் தகர்க்கும் புலிகளின் நோக்கம் நிறைவேறவில்லை. விமானங்கள் எதுவுமே சேதமடையவில்லை. எமது விமானப் படையினரின் தீரத்தால் பாரிய அழிவுகள் தவிர்க்கப்பட்டன என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தகவல் நிலையத்தில் நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-


விமானப் படைத் தளத்துக்கு இத் தாக்குதல் காரணமாகப் பாரிய சேதங்கள் எவையும் இல்லை. எதிரிகளுக்கு தகவல் வழங்கும் வகையில் மிக் - 27 விமானங்கள் தொடர்பான தகவல்களை கடந்த சில வாரங்களாக சிலர் வெளியிட்டு வந்தனர்.

புலிகளுக்குப் பலரும்

(03ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### செல்லையா நாகரத்தினம்

(உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் கோயில் பரிபாலன சபைச் செயலாளர், சுன்னாகம், இலங்கை வங்கி முகாமையாளர்)

இன்று (27.03.2007) தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து, வங்கிச் சேவையிலிருந்து இளைப்பாறும் உயர்திரு செல்லையா நாகரத்தினம் அவர்கள், உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் கோயில் பரிபாலன சபையின் செயலாளராகவிருந்து, சகலரும் விதந்துரைக்கும் வண்ணம் கவினுறும் மணிமண்டபம், எழில்மிகு சிற்ப வேலைகள், கண்கவர் வர்ண வேலைப்பாடுகள் ஆகிய திருப்பணி வேலைகள் சிறப்புற அமையப் பெரும் பங்காற்றியும் பாலஸ்தானம், கும்பாபிஷேகம் என்பன சிறப்புற நடந்தேற அயராது உழைத்தும், ஆற்றிய சேவையை நினைவு கூர்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு, அன்னார் தமது ஓய்வு காலத்தில் தொடர்ந்தும் செயலாளராகப் பணியாற்றி அம்பாள் ஆலயம் மென்மேலும் சிறப்புறப் பணியாற்ற அம்பாள் அருளவேண்டுமெனப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் ஓய்வுக்காலத்தில் அம்பாள் அவருக்கு அமைதியும் மகிழ்வும் மிக்க வாழ்க்கையை அருள வேண்டி அம்பாளைத் துதிக்கின்றோம்.

பரிபாலன சபையினர்,
உரும்பிராய். (59106) பர்வதவர்த்தினி அம்மன் கோயில்.

## Hatton National Bank

### அடகுப் பொருள்களை ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஆகிய கிளைகளில் 15/01/2006 இற்கு முன்னர் அடகுவைத்து இது வரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருள்கள் 31/03/2007 சனிக் கிழமை அன்று இல 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை
உடனே மீட்க முடியாவிட்டால்.

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

- முகாமையாளர்.

(சி/50866)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 12 * 06 * 1941 | 27 * 03 * 2006 |

### சென் ஜோண் ராஜா

ஓராண்டானாலும் உம் நினைவுகள் எம்மை விட்டகலா.

பிரிவால் துயருறும்:
99, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். (59976) ஆனந்தன் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 * 09 * 1920 | 07 * 04 * 2006 |

### அமரர் வேலுப்பிள்ளை சிவசாமி

(முன்னாள் கிராம சேவையாளர்-மயிலிட்டி)

திதி: நவமி

அறிவூட்டினே அன்பு தந்து
அகிலம் அதை நாம் காண
பாசமுடன் எமை வளர்த்த
எம் அன்புத் தெய்வமே அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1043, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (59048)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## பெயர் மாற்றம்

மாதாகோவிலடி, தலைமன்னார், மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணசாமி நாகரூபி ஆகிய நான் 12.03.2007 முதல் கிருஷ்ணசாமி விஜிதா என பெயர் மாற்றியதுடன் எனது சகல ஆவணங்களிலும் இன்று முதல் விஜிதா என்ற பெயரையே பயன்படுத்துவேன் என்பதனை அறியத்தருகின்றேன். (சி/50880)

## விற்பனைக்கு

கேபிள் T.V.க்குப் பாவிக்கக்கூடிய பெரிய டிஸ் அன்ரனா (Korean), LNB உடன் விற்பனைக்குண்டு. 0777283795 (59112)

## தவறிவிட்டது

செபமாலை பொன்மணி என்பவருடைய தே.அ. அட்டை (375994054V) (3ஆம் வட்டாரம் மண்டைதீவு எனும் முகவரியுடையது) யாழ். நகரிற்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நியூ அனிதா நகைமாடம், 213/D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (59107)

## தவறிவிட்டது

வைத்தீஸ்வரன் குணாளன் என்பவருடைய கைதடி கிழக்கு கைதடி எனும் முகவரியுடைய தே.அ. அட்டை (470521066V), மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ் என்பன நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கும் கோப்பாய் சந்திக்குமிடையில் யாழ் .- பருத்தித்துறை வீதியில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து முருகன் புடைவையகம் (மலாயன் கபே முன்பாக) , யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (59110)

## தவறிவிட்டன

புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பத்மநாதன் ஜெகநாதன் என்பவருடைய தே.அ. அட்டையும் (இல. 691983706V), விசேட அ. அட்டையும் திருநெல்வேலி சந்தைக்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் "சரஸ்வதி விலாஸ்" பரமேஸ்வராச் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 - 10 - 1940 | 25 - 02 - 2007 |

### மாரியன் தேவராசா (கந்தசாமி)

பரமனடி சேர்ந்துவிட்ட பாசமிகு
தந்தையே எப்பிறவி எடுத்தாலும்
இறுதிவரை மறவோம் உம்மை.

இன்று (27.03.2007) செவ்வாய்க்கிழமை அன்னாரின் திருப்பலிப் பூசை காலை 7 மணிக்கு மல்வம் திருக்குடும்ப மாதா கோயிலில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

சகோதரி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"சாந்தகிரி" (59115)
மல்வம், உடுவில், சுன்னாகம்.

## நன்றி நவில்கின்றோம்



நல்லூர், 46/5, சங்கிலி தோப்பு, அரச வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் அமைந்த

அமரர்
**நல்லநாயகி சண்முகலிங்கம் (மணியன்ரி)**

அவர்களின் துயரச் செய்தி கேட்டு அன்னாரின் வீட்டுக்கு உடன்வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் உள்ளூர், வெளியூர்களிலிருந்து அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மலர்வளையம் வைத்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர்களுக்கும் அன்றையதினம் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர் கள் அனைவருக்கும் எமது உணர்வுபூர்வ மான நன் றியை அன்புடன் தெரிவித்துக்கொள் கின்றோம்.

செ.சண்முகலிங்கம் (கணவர்),
ச.கண்ணன் (மகன்),
த.தர்சினி (மருமகள் - பிரான்ஸ்)
0336688889501

தகவல்:
ச.சண்முகரத்தினம்
ச.லோகேஸ்வரி
0212226199




## அறிவித்தல்

முருகையன் கோவிலடி, நெல்லியடி, கரவெட்டி என்ற விலாசத்தைச் சேர்ந்த அழகசாமி செட்டியார் சுப்பையா என்ற பெயரையுடைய நான், இதுவரை காலமும் சுப்பையா என்ற பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தேன் என்றும் இன்று தொடக்கம் நான் எனது சுயவிருப்பத்துடனும் தீர்க்கமான முடிவுடனும் எனது பெயரை பாஸ்கரன் என்று மாற்றி அமைத்துள்ளேன் என்றும் நான் ஒப்பமிடவேண்டிய சகல பத்திரங்களிலும் பாஸ்கரன் என்றே ஒப்பமிடுவேன் என்றும் இத்தால் சகல பொதுமக்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

- அ.பாஸ்கரன்.

(59111)

## துயர் பகிர்வு

எமது கல்வி நிறுவன பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியருமாகிய திருமதி ர.கண்மணி அவர்களின் அன்புத் தந்தை

**வேலுப்பிள்ளை கதிர்காமு**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

The Express Institute
Irupalai, Kapay. (சி/50865)

அதிபர், ஆசிரியர், ஆளணியினர்.

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை தரம் 1 மாணவி

**ஜெகதீஸ்வரன் கார்த்திகா**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரடையும் அதேவேளை தமது அன்புச் செல்வத்தை இழந்து தவிக்கும் குடும்பத்தினர் அனைவரின் துயரிலும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை,
நீர்வேலி.
(59105)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 - 10 - 1966 | 07 - 04 - 2006 |

### அமரர் கணேசு பரமதயாநாயகன் (தயா)


திதி: 27.03.2007

எங்கள் வாழ்வின் ஒளி விளக்கே !
எமது வாழ்வு சிறக்கப் பாடுபட்ட
எங்கள் அன்புத் தெய்வமே
மரணம் உங்களை மறைத்து விட்டாலும்
எங்கள் இதயத்தில் என்றும்
உங்கள் நினைவு நிலைத்திருக்கும்!

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில். (59042) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலேஸ்வரி இரத்தினபிரகாசம்



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் 115/4, W.A சில்வா மாவத்தை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி இரத்தினபிரகாசம் அவர்கள் கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா அன்னபூரணம் தம்பதியரின் புதல்வியும் செ.இரத்தினபிரகாசம்(முன்னாள் பணிப்பாளர், மத்திய வங்கி, கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் சுகுமாரன்(கணக்காளர், U.K) அவர்களின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி சண்முகநாதன் மற்றும் பத்மநாதன் (கணக்காளர்,U.K) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.03.2007) புதன் கிழமை காலை அன்னாரது கொழும்பு இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.இரத்தினபிரகாசம்(கணவர்)
தொ.பே. இல: 0112501477 (59113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# திருந்துமா தரப்புகள்?

நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய வான்தாக்குதல், இலங்கை இனப்போர் புதிய கட்டம் ஒன்றுக்குள் பிரவேசித்திருப்பதற்குக் கட்டியம் கூறுகின்றது.

இலங்கை இனப்போரில் முதல் வான் தாக்குதல் 1986 பெப்ரவரியில் யாழ்ப்பாணம், தாவடியில் இலங்கை விமானப்படையின் 'சியாமாச்செட்டி' விமானம் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வான் வழித்தாக்குதல் நடவடிக்கைக்குள், பதிலடியாகப் புலிகள் தரப்பு - தமிழர் தரப்பு - 22 ஆண்டுகள் கழித்து இப்போது பிரவேசித்திருக்கின்றது.

வன்னியில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து பல நூறு மைல்கள் ஒரு தாக்குதல் விமானத்தில் அல்லது இரண்டு விமானங்களில் பறந்து வந்து, இலங்கை விமானப்படையின் மைய மூளையான கட்டுநாயக்காத் தளத்தின் மத்திய பகுதியில் குண்டுவீச்சுத்தாக்குதலைப் புலிகள் நடத்திவிட்டுப் பாதுகாப்பாகத் தமது தளத்துக்குத் திரும்பியிருக்கின்றார்கள். இது இலங்கை அரசுக்குப் பெரும் சீற்றத்தையும் எரிச்சலையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

மூன்றாம் ஈழ யுத்தத்தின் போது தமது கடற்புலிகளை வலுவுள்ள ஒரு புதிய படையணியாக அறிமுகப் படுத்தி, அதன் மூலம் இந்த யுத்தத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள் புலிகள். இப்போது நான் காவது ஈழ யுத்தம் பரிணமிக்கும் கால கட்டத்தில் புலிகளின் வான் படையணி அறிமுகமாகின்றது. இனி வெடிக்கப்போகும் மோசமான யுத்தத்தில் அதன் பாதிப்பும், தாக்கமும், பங்களிப்பும் எவ்வாறு அமையப் போகின்றன என்பதை இனிப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எனினும், இப்போது புலிகள் நடத்திய வான் தாக்குதலும் கணிசமான விளைவுகளை உருவாக்கியுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

நேரடியாக இத்தாக்குதல் பெரிய சேதத்தை - பாதிப்பை - இலங்கை அரசுத்தரப்புக்கு ஏற்படுத்தி விட்டது என்று கூறுவதற்கில்லை. மூன்று விமானப் படையினர் உயிரிழந்து, பதினாறு படையினர் காயமடைந்து, ஒரு சில வான்கலங்கள் சேதமடைந்தமை தற்போது இடம்பெற்றுவரும் மோதல்களின் இழப்புகளுடன் ஒப்பிடுகையில் அப்படி ஒன்றும் பெரிய விவகாரமே அல்ல. அது மட்டுமல்ல, அரசு சார்பு ஆங்கில ஊடகமான ஏரிக்கரைப்பத்திரிகை நேற்றுத் தனது தலைநகர்ப் பதிப்பில் - முன்பக்கத் தலைப்புச் செய்தியில் - குறிப்பிட்டமைபோல, கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தில் தரித்து நின்ற 'மிக்' குண்டு வீச்சு விமானங்களைத் தாக்கும் விடுதலைப்புலிகளின் இலக்கு இந்த முயற்சியில் தவறிவிட்டது என்று கருதி தென்னிலங்கை புளங்காகிதம் கூட அடையலாம்.

ஆனால் இவை எல்லாவற்றுக்கும் அப்பால் சில விடயங்களையும், செய்திகளையும் இத்தாக்குதல் வெளிப்படுத்தியிருப்பதையும் மோசமான சில பாதிப்புகளை மறைமுகமாக அது ஏற்படுத்தியிருப்பதையும் அரசுத் தலைமை கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது. அவை கருதி, பல பதில் நடவடிக்கைகளையும் - கட்டு மட்டில்லா செலவுகளையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தக்கூடிய வினை எதிர்வுகளை - அது மேற்கொள்ள வேண்டிய கட்டாயமும் உள்ளது.

விமானப்படையின் மைய மூளைக்கே வான்புலிகளின் விமானங்கள் வந்து தாக்குதல் நடத்திவிட்டுப் பாதுகாப்பாகத் திரும்பியிருப்பதால் இத்தகைய தாக்குதல் ஆபத்துகள் இலங்கை முழுவதும் விரிந்திருக்கும் ஏது நிலை இப்போது உருவாகியுள்ளது.

வான் புலிகளின் ஆபத்தை எதிர்கொண்டு முறியடிக்கக்கூடியதான முன்னேற்பாடுகளை - அதாவது விமான எதிர்ப்பு கட்டமைப்பு வலிமையை - இலங்கை முழுவதும் அவசரமாகவும் விரைந்தும் விஸ்தரித்து, நிலை நிறுத்த வேண்டிய தேவையும் அரசுக்கு உரு வாகியிருக்கின்றது.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை, நாடாளுமன்றம் என்று தொடங்கி, துறை முகங்கள், விமான நிலையங்கள், எரிபொருள் கிடங்குகள், முக்கிய தொழில் மையங்கள், நாடு முழுவதும் பரந்து கிடக்கும் படைமுகாம்கள் மற்றும் படைத்தளபதிகள், மூத்த அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்றோரின் இல்லங்கள், பிரபலமான சமய, சமூக மையங்கள் எனக் கேந்திர ஸ்தானங்கள் எல்லாவற்றுக்கும் விமான எதிர்ப்பு ஆயுதங்களையும், அவற்றைக் கையாள்வதற்கான படையணிகளையும் கொண்ட கட்டமைப்புப் பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்ய வேண்டிய அவசரமும் அவசியமும் எழுந்துள்ளது.

யுத்த முனைக்குத் துருப்புக்களைக் காவிச்செல்லும் கப்பல்கள், கடல் ரோந்துக்கான படையணிக்கப்பல்கள் என்பன தொடக்கம் யுத்தமுனைவரையும் கூட இத்தகைய பாதுகாப்புக் கட்டமைப்பு முன்னேற்பாடுகள் அவசியமாகின்றன.

அது மாத்திரமல்ல, வானில் பறந்து தாக்கும் புலிகளின் வான் கலங்களைத் துரத்தி வானில் வைத்தே தாக்கி அழிப்பதற்கான உயர்தர - நவீனரக - யுத்தக் கருவிகளை தனது யுத்த விமானங்களில் அரசு பொருத்த வேண்டியும் நேரிடும். தற்போது அரசிடம் உள்ள விமானங்கள் வானிலிருந்து தரைக்கு இலக்கு வைத்துத் தாக்கும் வசதியையே கொண்டவை. வானில் இன்னொரு வான் கலத்துடன் வான் யுத்தம் புரியும் உயர் தொழில் நுட்பம் கொண்டவை அல்ல அவை.

எனவே, இவ்வளவு கேந்திர முக்கிய மையங்களுக்கும் விமான எதிர்ப்பு ஆயுதக்கட்டமைப்பை ஏற்படுத்தி, அவற்றைக் கையாள்வதற்கான ஆளணியை 24 மணி நேரமும் தயாராக நிறுத்துவது என்பதும், யுத்த விமானங்களை வான் வழி யுத்தங்களுக்கு உரியவையாக மாற்றுவது என்பதும் நினைத்துப்பார்க்க முடியாத செலவையும் வளத்தையும் கபளீகரம் செய்யக்கூடியவை.

புலிகள் தமது வான் படையணியைக் கட்டமைக்க செலவிட்ட நிதியைப்போல அந்தக்கட்டமைப்பால் நேரக்கூடிய ஆபத்தை முறியடிப்பதற்குத் தன்னைத் தயார் நிலையில் நிறுத்துவதற்காக அரசுத்தரப்பு பல நூறு மடங்கு செலவிட வேண்டி நேரும் என்பதே யதார்த்தம்.

அப்படித் தன்னைத் தயார் நிலையில் நிறுத்த அரசுத்தரப்பு தயாராகாவிட்டால், இப்போது இலங்கை விமானப் படையிடம் தினசரி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாங்கிக் கட்டுவது போல, புலிகளின் வான் படையணியிடம் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியும் அவ்வப் போது வாங்கிக்கட்ட வேண்டி நேரும்.

தவிரவும், புலிகளின் தற்போதைய தாக்குதல் நேரடியாக இலங்கையின் பொருளாதாரத்தின் அடிமடியிலேயே மீண்டும் கைவைத்திருப்பதையும் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.

இந்தத் தாக்குதலினால், இலங்கையின் வர்த்தகத்துறையில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் காப்புறுதிக் கட்டணங்கள் எகிறப் போகின்றன. ஏற்கனவே தள்ளாடிக் கொண்டிருக்கும் உல்லாசப்பய ணத்துறை நிரந்தரமாகவே படுத்துவிடும் ஆபத்தும் உள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் தொய்யும்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், அரசின் ஸ்திரத் தன்மை பாதிக்கப்படலாம். படையினரின் மனோ பலம் சிதறும்.

இப்படி இத்தாக்குதலின் விளைவுகள் நீண்ட பட்டியலிடக் கூடியவை.

அதே சமயம் இத்தாக்குதல் ஒரு திட்டவட்டமான - உறுதியான - செய்தியையும் இலங்கை அரசுக்கு மட்டுமல்ல, முழு உலகுக்கும் தெரியப்படுத்தியிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

வெல்லப்படமுடியாத இந்த யுத்தத்தில் திமிர்த்தன அணுகு முறையும், பேரினவாத மமதையும் பயன் தரப் போவதில்லை. இராணுவ வெற்றி மற்றும் இராணுவ சம நிலை என்பன ஊசல் போல இரு பக்கமும் மாறி மாறி இடம் மாறி அசையக்கூடியவை - என்பதே அந்தச் செய்தியாகும்.

இது புரியுமானால், இராணுவ அணுகுமுறை என்ற அழிவுப் பாதையைத் துறந்து, அமைதி வழித்தீர்வு என்ற சமரச வழிக்குத் இரண்டு தரப்புகளும் திரும்ப வேண்டும்.

அதற்கு இன்னும் காலம் தாழ்ந்து விடவில்லை.

திருந்துமா தரப்புகள்?

## பங்குச்சந்தை திடீர் சரிவு

கொழும்பு, மார்ச் 27

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதலைத் தொடர்ந்து கொழும்பு பங் குச் சந்தை வர்த்தகத்தில் பாரிய சரிவு ஏற்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

வெளிநாட்டு முதலீடுகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும் நிலையில் உள்ளூர் பங்குதாரர்களின் முடிவைத் தாம் எதிர்பார்த்திருக்கிறார்கள் என பங்கு நிறுவனம் ஒன்றின் உயர்அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்திருக்கிறார்.

# புலிகளின் வான் தாக்குதல் குறித்து விமானப் படைக்குழு விசாரணை

## முப்படையினரும் கொழும்பில் தேடுதல்

கொழும்பு, மார்ச் 27

கொழும்பு - கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது நேற்று அதிகாலை விடு தலைப் புலிகள் மேற்கொண்ட வான்தாக்குதலையடுத்து, விமானப் படையினர் விசேட விசாரணையை ஆரம்பித்திருக் கின்றனர். இதன் பொருட்டு விசேட விசாரணைக் குழு ஒன்று விசாரணையில் ஈடுபடுத்தப் பட்டிருப்பதாக விமானப் படையின் ஊடகப்பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டீ சில்வா தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சம்பவத்தில் 3 விமானப் படை யினர் உயிரிழந்தது டன், 17பேர் படுகாய மடைந்துள்ளனர். இதற்கான காரணத்தைக் கண்டறியும் நோக்கிலேயே இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாக விமானப் படையின் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை -

மேற்படி சம்பவத்தின் பின்னர் கொழும்பு நகரிலிருந்து வெளியே சென்ற வாகனங்களும் வெளியிலிருந்து உட்பிரவேசித்த வாகனங்களும் முப்படையினரால் நேற்று தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன. அத் துடன் கொழும்பு - நீர் கொழும்பு இடையிலான பிரதான வீதி மூடப்பட்டு தீவிர சோதனை நடவடிக்கையில் முப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# தென்மராட்சி 4 குழந்தைகளை தத்து எடுப்பதற்கான விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 27

சாவகச்சேரி நீதிமன்றின் பொறுப்பில் உள்ள நான்கு குழந்தைகளைத் தத்துக்கொடுப்பதற்கு தகுதியான தம்பதிகளைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் இரண்டாம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

குழந்தைகளை தத்து எடுப்பதற்கு விண்ணப்பித்த தம்பதிகள் தமது தேசிய அடையாள அட்டை, திருமணச் சான்றிதழ், மருத்துவச் சான்றிதழ், சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் ஆகியவற்றின் மூலப்பிரதிகளையும் அவற்றின் புகைப்படப் பிரதிகளையும் கொண்டு வருமாறு நீதிமன்றப் பதிவாளர் சோ. வைத்தியநாத பிள்ளை கேட்டுள்ளார்.

## ஜப்பானில் ஞாயிறன்று 7.1 ரிச்டரில் நிலநடுக்கம்

ஜப்பானின் மத்திய பகுதியில் உள்ள நோட்டோ தீபகற்பத்தின் கடலோரத்தில் நேற்றுக் காலை சுமார் 6.12 மணிக்கு 7.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானது.

கடல் மட்டத்தில் இருந்து 50 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்தப் பயங்கர நிலநடுக்கத்தை தொடர்ந்து சிறிய அளவில் சுனாமி அலைகள் தாக்கின. நோட்டோவின் மேற்கு பகுதியில் உள்ள வாஜிமா நகரத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் நிலநடுக்கத் தின் போது கல் விழுந்ததால் உயிரிழந்தார். நிலநடுக்கத்தினால் ஏராளமான வீடுகள் தரை மட்டமாகின. (அ)

# கதிர்காமர் கொலைச் சந்தேகநபர்கள் ஐவருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள ஐந்து சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் ஏப்ரல் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவர்கள் ஐவரும் கொழும்பு பிரதம நீதிவான் குசலசரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயமே இந்த உத்தரவை நீதிவான் விடுத்தார்.

இந்த ஐவரும் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்படுவதற்கு முன்னரே கைதுசெய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-06)

## பேச்சு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாகவே இதை நாம் காண்கிறோம்.

இவ்வாறான நிலைமைகளை இல்லாதொழித்து நல்லதொரு சுமுகமான நிலையைத் தோற்று விக்க வேண்டும் என்றால் பேச்சுமூலமான தீர் வொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

ஜனநாயக நாடு, சமத்துவம் மற்றும் எல்லா இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பரஸ்பர மதிப்பு போன்றவற்றை அடிப் படையாகக் கொண்டு அரசியல் தீர்வு அமைய வேண்டும்.- இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விமானப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ இரகசியங்களை தொடர்ந்தும் வழங்கி வருகின்றனர்.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அந்தக்கால கட்டத்தில் இரணைமடுப் பகுதியில் விமான ஓடுபாதை அமைக்கப் பட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

விமானத் தளம் மீதான தாக்குதல்கள் தொடர்பாக இப்போது விசாரணைகள் நடைபெற்றுவருகின்றது. விசாரணைகள் முடிவுற்றதும் ஊடகங் களுக்கு முழுத் தகவல்களும் வழங்கப் படும். எதையும் மறைக்கும் நோக்கும் அரசுக்கில்லை. நேற்று அதிகாலை இத் தாக்குதலின்போது 3 குண்டுகள் வீசப் பட்டன. இரண்டு குண்டுகள் மாத்திரமே வெடித்தன. ஒரு குண்டு வெடிக்க வில்லை - இவ்வாறு அவர் தெரிவித் தார். (சி)

## இலங்கைக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்பொழுது இலங்கையில் நிலவும் பதற்றமான - குழப்பமான - சூழ்நிலைகள் காரணமாக அங்கு பரவலான தாக்குதல்கள் இடம்பெறும் அபாயமுள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்கள் இலங்கையின் எந்தப் பாகத்திலும், எந்நேரத்திலும் இடம்பெறலாம். இதில் தற்செயலாக ஆஸ்திரேலியர்களும் பாதிக்கப் படலாம். எனவே இதனைக் கருத்திற் கொண்டு இலங்கைக்கான பயணத்தை ஆஸ்திரேலியர்கள் தவிர்ப்பது சிறந்தது என வெளிவிவகார திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (எ)

## நாளை

பங்குனி - 14
புதன்கிழமை
28.03.2007
திதி: தசமி
பிற்பகல் : 04.35
நட்சத்திரம்: பூசம்
முன்னிரவு : 10.29
சுபநேரம் : 04.44 - 06.14
ராகுகாலம் : 12.14 - 01.44

## புலிகளின் வான் தாக்குதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''புலிகளின் விமானங்கள் முல்லைத்தீவிலிருந்து புறப்பட்டு கொழும்பு வரை சென்று தாக்குதலை நடத்தி விட்டு பாதுகாப்பாகத் தளத்துக்குத் திரும்பியிருக்கின்றன என்றால் தமிழ் நாட்டுக்கு வருவது ஒன்றும் அவர்களுக்குக் கஷ்டமான காரியமல்ல. ஏனென்றால், தமிழ்நாடு அவர்களுக்கு கொழும்பைவிடகிட்டவே யுள்ளது'' - என்றார் அந்த அதிகாரி.

''இது, அவர்களின் தந்திரோபாய வலிமையை வெளிப்படுத்தும் ஒரு தீரச் செயல். தங்களது வலிமையை தங்களால் என்ன செய்யமுடியும் என்பதை - அவர்கள் நிரூபித்திருக்கின்றார்கள் - என்று மற்றொரு அதிகாரி கூறினார்.

''இந்தப் பிணக்கை தங்களால் மேலும் மோசமாக்கத் முடியும் என்பதை இதன்மூலம் அவர்கள் காட்டியிருக்கின்றார்கள். இன்னும் என்னென்ன நடக்கப்போகின்றன - நடக்கக் காத்திருக்கின்றன - என்பது எமக்குத் தெரியவில்லை'' - என்று அங்கலாய்த்தார் மற்றொரு அதிகாரி.

### இந்திய நலனுக்கு எதிரானது அல்ல

இதேசமயம், விமானப் படையணி தொடர்பாகப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எற்கனவே கூறியிருந்த கருத்துக் கவனிக்கத்தக்கது.

''எங்களது இயக்கத்தின் கட்டமைப்புகளும் முயற்சிகளும் எமது மக்களின் பாதுகாப்பையே இலக்காகக் கொண்டவை. இது எந்த நாட்டினது நலனுக்கும் - குறிப்பாக இந்தியாவின் நலனுக்கும் - எவ்வகையிலும் எதிரானது அல்ல. எனவே, இது குறித்து இந்தியாவோ, இந்திய மக்களோ அஞ்சத் தேவையில்லை. எனவே, இவ் விடயம் பற்றி இந்தியா, குரல் எழுப்பி, கவலை தெரிவிப்பது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது'' - எனத் தமிழ்ச் செல்வன் முன்னர் கூறியிருந்தார்.

### மோசமான விளைவுகளைத் தரலாம்

புலிகள், தமது வான்படை மூலம் தற்கொலைத் தாக்குதலுக்கோ அல்லது வேறு முக்கியமான இலக்குக்கோ முயல்வதாயின் அந்தத் தாக்குதல் மிக மோசமான விளைவுடையதாக இருக்கும் எனக் கருதும் இந்திய அதிகாரிகளும் உள்ளனர்.

புலிகள் பல இராணுவப் பின்னடைவுகளைச் சந்தித்துவரும் இந்த வேளையில் இந்த வான் தாக்குதல் இதுவரை சலித்துப் போயிருந்த புலிகளின் ஆதரவாளர்களை ஊக்கமுறச் செய்து கிளர்ச்சிகொள்ள வைத்திருக்கும் என்பது திடனம்.

1998இல் மாவீரர் தினத்தில் முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியவளையில் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வின் போது புலிகளின் வானூர்தி ஒன்று வானில் பறந்தபடி மாவீரர் துயிலும் இல்லத்தின் மீது மலர் தூவியதை பலருக்கும் நினைவிருக்கலாம்.

இவ்விடத்தில் - புலிகள் வான்படையை அபிவிருத்திசெய்யும் விவகாரத்தில் - இந்தியா கவலை கொண்டுள்ளது என்பதை பல ஆண்டுகள் கழித்து வெளிவந்ததும் அதற்காக இலங்கை அரசுக்கு 'ராடர்' வசதிகளை இந்தியா வழங்கியது என்பது பின்னர் அம்பலமானதும் குறிப்பிடத்தக்கவை.

- இப்படி இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் நடத்திய வான்தாக்குதல் தொடர்பாக விமானப்படையின் உயர் அதிகாரி ஒருவர் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சித் தலைவர்களுக்கு விளக்கினார். தாக்குதல் தொடர்பான தமதுசந்தேகங்களை கட்சித் தலைவர்கள் விமானப்படை அதிகாரியிடம் கேள்விகளாகத் தொடுத்தனர். அவற்றுக்குப் பதிலளித்தார் அந்த அதிகாரி.

இந்தக் கூட்டத்தின் பின்னர், குறித்த வான் தாக்குதல் சம்பவம் தொடர்பாக, கூட்டதில் கலந்துகொண்ட கட்சிகள் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் அழைக்கப்படவில்லை. (அ-சி)

குடாநாட்டின் ட்டிச் செய்திகள் யாழ்ப்பாணம்

## வட்டுக்கோட்டையில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

சங்கானை, மார்ச் 27

வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பகுதியில் வைத்து நேற்று முற்பகல் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

களபூமி, காரைநகரைச் சேர்ந்த முருகேசு சங்கரப்பிள்ளை (வயது - 56) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சங்கரத்தை தபாலகத்துக்கு அண்மையில் வீதியில் இவர் நின்றிருந்த வேளை, மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாதோர் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் பதில் நீதிவான் எஸ். வசந்தசேனன் விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன் பின்னர் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-29-8)

## சங்கானையில் திருட்டுச் சம்பவங்கள்

சங்கானை, மார்ச் 27

சங்கானை பிரதான வீதியில் உள்ள கடைகளில் திருட் டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

நகைக்கடை, புடைவைக்கடை, மதுபான நிலையம் ஆகியன உடைக்கப்பட்டு திருட்டுகள் இடம் பெற்றுள்ளன.

மானிப்பாய் பொலிஸாருக்கு முறையிடப்பட்டதை அடுத்து, அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-29-203)

## பல்கலைக்கழகத்தில் இன்று நாடகவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

உலக நாடக தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக வெறுவெளி அமைப்பு நடத்தும் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெற உள்ளன.

இந்நிகழ்வில் மூடி, 2004 - 9.0 ஆகிய நாடகங்கள் இடம்பெறும்.

குடாநாட்டில் நிலவிவரும் காகிதத் தட்டுப்பாடு காரணமாக இந்நிகழ்விற்கான அழைப்பிதழ்கள் பன்னாடையில் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-202)

## கப்பல் மூலம் ரோச் பற்றிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

குடாநாட்டுக்கு 96ஆயிரம் ரோச்பற்றிகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த ரோச் பற்றிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகப் பாவனையாளருக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-8)

## ICC Cricket World Cup West Indies 2007 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 2007

### பங்களாதேஷ் வெற்றி; வெளியேறியது இந்தியா

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் முதல் சுற்றின் கடைசி ஆட்டம் நேற்றுமுன்தினம் பங்களாதேஷ் - பேர்முடா அணிகளுக்கிடையே நடைபெற்றது.

பிரிவு 'பி' இல் இருந்து இலங்கை அணியுடன் இந்திய அணியா? பங்களாதேஷ் அணியா? அடுத்த சுற்றுக்குத் தெரிவாகும் என்பதைத் தீர்மானிக்கும் போட்டியாக இது அமைந்தது.

கடுமையான மழை காரணமாக தாமதமாக ஆரம்பமான இந்த ஆட்டத்தின் ஓவர்களின் எண்ணிக்கை முதலில் 41 ஆகக் குறைக்கப்பட்டது. தொடர்ந்தும் ஆட்டத்தில் மழை குறுக்கிட்டதன் காரணமாக ஓவர்கள் எண்ணிக்கை 21 ஆகக் குறைக்கப்பட்டது.

இந்த நிலையில் டக்வோத் லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றது. பங்களாதேஷ் அணி இதில் வெற்றி பெற்றதன் காரணமாக இந்திய அணியின் உலகக் கிண்ணக் கனவு கலைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பேர்முடா அணி 21 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 17.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று 'சுப்பர் - 8' சுற்றுக்குத் தெரிவானது.

இன்றைய ஆட்டம்:

★ மேற்கிந்தியத் தீவுகள் எதிர் ஆஸ்திரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் பிராந்தியத்துக்கே வான் புலிகளால் ஆபத்து!

## அரசுத் தரப்பிலிருந்து அபாயக்குரல்

கொழும்பு, மார்ச் 27

இந்த பிராந்தியத்திலுள்ள பயங்கரவாத அமைப்புகளிடம் இல்லாத வகையில் விடுதலைப்புலிகளிடமே விமான படைப் பலம் இருக்கிறது. இது இப்பிராந்தியத்துக்கே பெரும் அச்சுறுத்தலாகுமென அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே நேற்று தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையத்தில் நேற்றுமாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஐ.தே.கட்சி செய்து கொண்டதன் பின்னர் இரணைமடு பகுதியில் விமான ஓடு பாதைகள் அமைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகின. மேலும் புலிகளிடம் விமானங்கள் இருப்பதாகவும் இக்கால கட்டத்திலேயே விமானங்கள் கொண்டுவரப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. கருணாவும் இச்செய்திகளை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

**விலக்கப்பட்ட அமைச்சர்களும் உதவியிருக்கலாம்**

நேற்று அதிகாலை விமானப் படைத் தளத்தில் இடம்பெறவிருந்த பேரழிவு, எமது விமானப்படையினர் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டதால் தடுக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் காரணமாக அரசு சளைத்து விடப்போவதில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராக அரசு தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொள்ளும். புலிகள் விமானத் தளம் மீது தாக்குதல் நடத்துவதற்கு அரசாங்கத்தில் இருந்துவிலக்கப்பட்ட அமைச்சர்களும் உதவி இருக்கலாம்.

2001 ஜூலை 21ஆம் திகதியும் இதே போன்றதொரு தாக்குதலை புலிகள் மேற்கொண்டனர். இதில் விமானப்படை விமானங்கள் மற்றும் பயணிகள் விமானங்கள் உட்பட 13 விமானங்கள் அழிக்கப்பட்டன.

ஆனால், நேற்று இலக்குவைக்கப்பட்ட 'மிக் - 27 ரக விமானங்கள் தொடர்பாக இரு முன்னாள் அமைச்சர்கள் புலிகளுக்கு உதவும் வகையில் சில தகவல்களை கடந்த இருவார காலமாக வெளியிட்டு வந்துள்ளனர். இது படை வீரர்களின் மனத்தைரியத்தை பாதிக்கும் வகையில் அமைந்துவிட்டது.

**'கதேப் பசுபிக்' விமானசேவைகள் ரத்து**

சில வெளிநாட்டு ஊடகங்கள் கொழும்பு சர்வதேச விமான நிலையம் தாக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளன. இதனால் ஆஸ்திரேலிய 'கதேப் பசுபிக்' விமான சேவைகள் மறுஅறிவித்தல் வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இது தவறான தகவலின் விளைவாகும். சர்வதேச விமான நிலையம் தாக்கப்படவில்லை. அதற்கு அருகேயுள்ள விமானப்படையின் விமானத்தளமே தாக்கப்பட்டது.

இதனால் எதுவித பாரிய சேதமும் இல்லை.

பயணிகள் விமான நிலையமும் விமானப் படைத்தளமும் அருகருகே இருக்கக் கூடாது. நான் விமான சேவைகள் அமைச்சராக இருந்தபோது விமானப் படைத்தளத்தை வேறு இடத்துக்கு மாற்ற அமைச்சரவையின் அனுமதி பெற்றேன். இப்போது அதற்கு என்ன நடந்தது எனத் தெரியாது.

இத்தாக்குதல் காரணமாக விமானப் படைக்குச் சொந்தமான வேறு கட்டடங்கள் சிறிது சேதமுற்றுள்ளன. - என்றும் அவர் சொன்னார். (உ-2)

## மட்டக்களப்பில் முகாம்களுக்கு அருகே குடியிருக்க வேண்டாமென புலிகள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 27

கிழக்கில் மட்டக்களப்பில் இராணுவமுகாம்கள், படை நிலைகளுக்கு அருகே குடியிருக்க வேண்டாம் என்று எச்சரிக் கும் பிரசுரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர் என்று தெரியவந் துள்ளது.

இது தொடர்பாக புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில் படையினர் எம்மீது திணித்துள்ள ஆக்கிரமிப்புப் போரை முறியடிக்க எமது படையணிகள் தயா ராகியுள்ளன. நாம் பலவிதமான தாக்குதல்களைப் படை முகாம்கள் மீதும் படையினர்மீதும் மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே, படை முகாம்களிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் சுற்றளவிலுள்ள மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அண்மைய நாட்களில் இராணுவ முகாம்கள் மீது நடத்தப்பட்ட பல தாக்குதல்களில் துரதிஷ்டவசமாக பொதுமக்கள் சிலர் காயமடைந்துமுள்ளதால் இதனைக் கருத்தில் கொண்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த வேண்டுகோளை விடுக்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புலிகளின் முதல் வான் தாக்குதலால் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சி அலை

கொழும்பு, மார்ச் 27

கட்டுநாயக்காவில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா விமானப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகளின் வான்படையினர் முதல்முறையாக விமானத்தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

நேற்று அதிகாலை இருளோடு நடத்தப்பட்டிருக்கும் இத்தாக்குதல் நாட்டின் முழுப் பாதுகாப்புக் கட்டமைப்பையும் உலுக்கியிருப்பதுடன் தேசம் முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்தியிருக்கும் முதலாவது விமானத்தாக்குதல் இது என்பதால் சர்வதேச செய்தி ஊடகங்களும், நிறுவனங்களும் இந்தத் தாக்குதலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

விடுதலைப்புலிகள் வசம் வான்படை ஒன்று இருப்பது பற்றிய செய்திகள் கடந்த சுமார் பத்தாண்டுகளாக அவ்வப்போது அடிபட்டுவந்த போதிலும், புலிகள் தங்களது தாக்குதல்கள் எவற்றுக் கும் விமானங்களை இதற்கு முன்னர்பயன் படுத்தியதில்லை.

நேற்று திங்கள் அதிகாலையில் இருளின் போர்வையில் புலிகள் தங்களது முதலாவது வான் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

**இலகுரக விமானம் ஒன்று மட்டுமே தாக்குதல் நடத்தியது**

விமானப்படைத் தளத்தின் மீது சரியாக 12 மணி 40 நிமிடமளவில் இலகு ரக விமானம் ஒன்று பறந்தது என்றும் அதிலிருந்து சில வெடி பொருள்கள் வீசப்பட்டன என்றும் விமானப்படைப் பேச்சாளர் அஜந்த டி சில்வா தெரிவித்தார். இதனால் ஏற்பட்ட இராணுவத் தளபாட சேதம் மிகச் சிறியது என்றும் அவர் தெரிவித்தார்.

இத் தாக்குதலில் தங்களது இரண்டு விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

**40 நிமிட நேரம் வானில் பறந்தது**

அடையாளம் தெரியாத விமானம் ஒன்று வடக்கு வானில் பறப்பது ரடார் திரையில் சுமார் 40 நிமிட நேரம் அவதானிக்கப்பட்டது என்று விமானப்படை கூறுகின்றது.

வன்னியில் இருந்தே விமானம் வானில் கிளம்பியமை தெரியவந்திருக்கி றது என்றும், தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்பாக 40 நிமிடநேரம் அது வானில் பறந்தது அவதானிக்கப்பட்டது எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விமானப்படைத்தளத்தில் உள்ளவிமானப் பொறியியல் பிரிவு மீதே இலகு ரக விமானம் ஒன்று மூன்று குண்டுகளை வீசியுள்ளது. அவற்றில் ஒன்று வெடிக்க வில்லை என்று விமானப்படை கூறுகின்றது.

இதே சமயம் வானில் பிரகாசமான ஒளிப்பிளம்புகளைத் தொடர்ந்து நான்கு பெரிய வெடி ஓசைகளைத் தாங்கள் கேட்க முடிந்தது என்று விமானப்படைத்தளத்தின் அயலில் வசிப்போர் தெரிவித்திருக்கின்றனர்.

விமானப்படைத்தளத்தில் போர் விமானங்கள் எதுவும் இந்தத் தாக்குதலில் சேதமடையவில்லை என்று - பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. ஆனால் இரண்டு குண்டுகள் விமானப் பொறியியல் பிரிவைத் தாக்கியதில் அங்கு நிறுத்தப்பட்டிருந்த இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சேதமடைந்தன என்று விமானப் படை தெரிவித்துள்ளது.

**கிபிர் விமானங்களே இலக்கு**

விமானப்படையின் 'கிபிர்' யுத்த விமானங்களே விடுதலைப்புலிகளின் தாக்குதல் இலக்கு என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

**விமான நிலையத்தில் அல்லோல கல்லோலம்**

நேற்றைய விமானத்தாக்குதலின் காரணமாக விமானப்படைத்தளத்துக்கு அடுத்து அமைந்துள்ள கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் அல்லோல கல்லோலப்பட்டது. எனினும் விமான நிலையத்துக்கோ விமான ஓடுபாதைக்கோ சேதங்கள் ஏற்படவில்லை என்று வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்தார்.

விமான நிலையப் பணிகள் நிறுத்தப்பட்டு சிலமணிநேரம் விமான நிலையம் மூடப்பட்டது. அச்சமயம் கொழும்பு நோக்கி வந்த விமானங்கள் சென்னை நோக்கித் திருப்பி விடப்பட்டன. புறப்படவிருந்த விமானங்களின் பயணம் நிறுத்தப்பட்டது.

விமானப் பயணத்துக்காக வந்திருந்த பயணிகளை விமானநிலையப் பாதுகாவலர்களும், பொலிஸாரும் அவசரமாக வெளியேற்றினர். விமானப்படைத்தளத் தைச் சூழவும் விமான நிலையத்தைச் சுற்றியும் பெருந்தொகையான படையினர் குவிக்கப்பட்டனர். தரைவழித் தாக்குதல்கள் இடம் பெறலாம் என்று கருதி தேடுதல்களும் அப்பகுதியில் முடுக்கிவிடப்பட்டன.

**தற்கொலைப் படை உள்ளே குதித்திருக்கலாம் என்ற சந்தேகம்**

விமானத்திலிருந்து புலிகளின் தற்கொலைப்படையினர் பரசூட் உதவியுடன் விமானப்படைத்தளத்தின் உள்ளே குதித்திருக்கக்கூடும் என்று கருதப்பட்டதால் தீவிர சோதனைகள் மோப்பநாய்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றைய தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்ட இலகு ரக விமானங்கள், அவற்றின் விமானிகள், தாக்குதல் அணியினரின் படங்களை விடுதலைப்புலிகள் செய்தி நிறுவனங்கள் ஊடாக வெளியிட்டிருக்கின்றனர்.

நீல வர்ண சீருடையில் வான் புலிகள் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் எடுத்துக்கொண்ட படங்களும் அவற்றில் காணப்பட்டன.

'வானோடி' என்று குறிப்பிடும் தங்களது விமானப்பிரிவின் சின்னத்தையும் புலிகள் வெளியிட்டிருக்கின்றனர்.

தாக்குதலை நடத்துவதற்காக அணியினர் விமானத்தில் ஏறுகின்ற காட்சியும் படங்களில் காணப்பட்டது. (சி)

## வான் புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பதாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் பிரதான எதிர்க்கட்சி இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறது.

பிரதமருக்கு ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல் மூலம் இந்த நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்பு மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.

நாட்டில் அதிகரித்துள்ள கொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் போன்றவற்றை கவனத்தில் எடுக்கவேண்டிய நிலையில் நாம் இப்போது உள்ளோம். புலிகளின் ஆகாய பலம் அறியப்படாமல் அல்லது அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்ததன் விளைவை நாம் இப்போது சந்தித்துள்ளோம்.

இந்த நிலைமையால் நாட்டுமக்கள் அனைவரும் பாரியபாதுகாப்பு அச்சுறுத்தலைஎதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலைகளின் மத்தியில் இது தொடர்பான வதந்திகள் பரவ இடம்கொடாமல் இத்தாக்குதல் தொடர்பாக விவாதம் நடத்துவதற்காக நாடாளுமன்ற நிலையில் கட்டளைப் பிரிவு 14 இன் பிரகாரம் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆகவே உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான வேண்டுகோளை பிரதமராகிய நீங்கள் சபாநாயகருக்கு விடுக்க வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ-7)

## கோழைத்தனமான தாக்குதல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளாக்கியிருக்கின்றனர். உயிரிழந்தோரின் உற்றாருக்கு அரசு தனது ஆழ்ந்த அனு தாபத்தைத் தெரிவிக்கின்றது.

இரண்டு குண்டுகள் வெடித்தன

விமானப் படைத்தளத்தில் விமானங்கள் தரிக்கும் பொறியல் பிரிவு மீது இலகு ரக விமானம் ஒன்று மூன்று குண்டுகளை வீசியுள்ளது. அவற்றில் இரண்டு வெடித்துள் ளன. மூன்றாவது வெடிக்கத் தவறியுள்ளது.

இத்தாக்குதல் நேற்று அதிகாலை 12.45 மணிக்கு இடம்பெற்றது. உடனடியாக விமானப் படையின் தற்பாதுகாப்பும் பொறிமுறை செயற்பட வைக்கப்பட்டதன் மூலம் எதிரி விமானம் மேலும் முயற்சி எடுக்காமல் தடுக்கப்பட்டது. தரிப்பு நிலையத்தில் இருந்த யுத்த விமானங்களோ அல்லது விமான ஓடு பாதையோ சேதமடையவில்லை.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், நேர அட்டவணைப்படி அங்கு வந்திறங்கும் மற்றும் அங்கிருந்து புறப்பட்டுக்செல்லும் விமானங்களுக்காக முழு அளவில் இயங்குகின்றது.

**தோல்விகளால் புலிகளுக்குப் பாதிப்பு**

பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து பொது மக்களை மீட்கும் நடவடிக்கை யில் கடந்த சில வாரங்களாகப் படையினர் வெற்றி கண்டு வருவதால் புலிப்பயங்கர வாதிகள் பெரிய தோல்விகளால் பாதிக் கப்பட்டுள்ளனர்.

களமுனையில் இவ்வாறு தோல்விகளை முகம் கொள்ளும்போது கோழைத்தனமான தாக்குதல்களை நடத்தி அதிக சேதங்களை ஏற்படுத்தும் முயற்சியை நாடுவது பயங் கரவாத இயக்கங்களின் வழமையான செயற்பாடுதான்.

அவமானத்துக்கு உள்ளாகும் தோல்விகளைச் சந்திக்கும்போது, இவ்வாறு சிவிலியன்களின் வாழ்வைக் குழப்பும் முயற்சிகள் தொடரலாம் என்பதால் படைகள் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

குறுகிய அரசியல் வேறுபாடுகளைக் கடந்து எழுவதற்கும் பாதுகாப்புப் படைகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் விமர்சிப்பதைத் தவிர்ப்பதற்குமான வேளை இது. அத்தகைய பிரசாரங்கள் புலிப்பயங்கரவாதிகளை வலுப்படுத்தி, பாதுகாப்புப் படையினரின் மனோவலிமையைக் குன்றச்செய்துவிடும்.

**தேசமே உயர்ந்தது**

தேசமே உயர்ந்தது என்பதை வலியுறுத்தவும், இலங்கையின் இறைமையையும், ஆள்புல ஒருமையையும் எந்த அரசியல் இலக்கினாலும் மேலாதிக்கம் கொள்ளவியலாது என்பதை உறுதிப்படுத்தவும் அரசு விரும்புகின்றது.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்காக எந்தவிதமான சவாலையும் எதிர்கொள்ள அரசு தயாராகவுள்ளது. இந்தத் தேசிய நோக்கத்தை எட்டுவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கும்படி இலங்கை சமூகத்தின் அனைத்துப் பகுதிகளையும் அரசு கோருகின்றது.

தேசத்தின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்து, பயங்கரவாதப் போக்கை அகற்றுவதற்காக சம்பந்தப்பட்ட அனைவரும் தங்களது குறுகிய அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஆதரவு வழங்கி நிற்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


## தவறிவிட்டது

'லப்டொப்' கணனியின் பவர் பக் (Pag) யாழ். ரெலிக்கொம் அலுவலகத்துக்கும் கந்தர்மடத்துக்கும் இடையில் தவறி விட்டது.கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: எஸ்.பாஸ்கரன்,
ஸ்ரீலங்கா ரெலிக்கொம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777 579812

## மரண அறிவித்தல்

### நடராசா ஞானபூரணம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுவாமியார் வீதி, கொழும்புத்துறையை வதிவிடமாகவும் கொண்ட நடராசா ஞானபூரணம் நேற்று (26.03.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா, விஜரத்தினம், மனோண்மணி, இராசநாயகம் மற்றும் செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவநாதன் (கனடா), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் சாந்தகுமாரி (கனடா), சதானந்தசிவம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் விந்தியா, பிரம்மியா, ரஷ்மி, நிரோஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியவில் அன்னாரின் வடலியடைப்பில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வநாயகம் (சகோதரன்)
வடலியடைப்பு.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org